சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா.1 திருமதி. ஜெயலட்சுமி க /பெ . காளி, வயது,50.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்திற்கு பிறகு எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன் என்றால் சம்பவம் 09.00 மணிக்கு நடந்தது பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று விட்டு மருத்துவமனைக்கு வந்தேன். நான் காவல் நிலையத்திற்கு சென்ற போது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல்துறையினர் மறுநாள் காலை 07.00 மணி அளவில் வந்து என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். காவல்துறையினரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் ரமேஷ் என்பவரின் வீட்டிடம் சம்பவம் நடைபெற்றதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். காவல்துறையினர் அதற்கு பின்னர் என்னை விசாரிக்கவில்லை. காவல்துறையினரிடம் எதிரிகள் என்னை தாக்கிய ஆயுதம் குறித்து கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசாரிடம் சம்பவ இடம் குறித்து நான் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். எதிரி சுப்பிரமணியிடம் சீட்டு பணம் கட்டுவதில் பிரச்சனை ஏற்பட்டு நான் அவரை செருப்பால் அடித்ததால் எங்களுக்குள் முன்பிரோதம் இருந்தது என்றால் சரி அல்ல அவர்தான் என்னை தாக்கினார். நான் பாதிப்படைந்துள்ளேன். நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி எதிரிக்கு எதிராக பொய் புகார் அளித்து அதற்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.